08.03.2017

தினமணி

## 91 முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் 41% சரிவு

நாட்டிலுள்ள 91 முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம், மொத்த கொள்ளளவில் சுமார் 41 சதவீதம் குறைந்துள்ளது என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக, மத்திய நீர் வள அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது: நாட்டிலுள்ள முக்கியமான 91 நீர்த்தேக்கங்களில் மொத்த நீர்மட்டம் சுமார் 157.799 பில்லியன் கன மீட்டராகும் (பில்லியன் = 100 கோடி). மார்ச் 2-ஆம் தேதி நிலவரப்படி, இந்த நீர்த்தேக்கங்களின் மொத்த நீர்மட்டம் சுமார் 64.55 பில்லியன் கன மீட்டராகும். இது மொத்த கொள்ளளவில் சுமார் 41 சதவீதம் குறைவாகும்.

நாட்டில், ஹிமாசலப் பிரதேசம், திரிபுரா, ஆந்திரப் பிரதேசம், கேரளம், கர்நாடகம், தமிழ்நாடு ஆகிய மாநிலங்களிலுள்ள நீர்த்தேக்கங்களில் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் நீர்மட்டம் குறைந்துள்ளது.

எனினும் பஞ்சாப், ராஜஸ்தான், ஜார்க்கண்ட், ஒடிஸô, மேற்கு வங்கம், குஜராத், மகாராஷ்டிரம், உத்தரப் பிரதேசம், உத்தரகண்ட், மத்தியப் பிரதேசம், சத்தீஸ்கர், தெலங்கானா ஆகிய மாநிலங்களிலுள்ள நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

## உற்பத்தி உயர்வால் உரம் பயன்பாடு 3% அதிகரிக்கும்: எஸ்.பி.ஐ., ஆய்வு பிரிவு மதிப்பீடு



மும்பை : 'வேளாண் விளைபொருட்கள் உற்பத்தி அதிகரிப்பால், அடுத்த இரு ஆண்டுகளில், விவசாய உரங்களுக்கான தேவைப்பாடு, ஆண்டுக்கு, 3 சதவீதம் அதிகரிக்கும்' என, எஸ்.பி.ஐ., பொருளாதார ஆய்வு பிரிவின் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

அதன் விபரம்:விவசாயத் துறை, பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஈடு கொடுக்கும் வகையில், உணவு தானியங்கள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய நிலையில் உள்ளது. வருவாய்இதையொட்டி, விளைநிலங்களை விவசாயத்திற்கு ஏற்ற வகையில் தயார்படுத்துவது முதல், விளைபொருள் சேமிப்புக் கிடங்குகளை அதிகரித்து, சரக்கு போக்குவரத்துக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவது வரை, பல கட்ட வளர்ச்சிப்பணிகள் நடைபெற்று வருகின்றன.மத்திய பட்ஜெட்டில், அடுத்த ஐந்து ஆண்டுகளில், விவசாயிகளின் வருவாயை இரு மடங்கு அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள்

எடுக்கப்படும் என, தெரிவிக்கப்பட்டு உள்ளது. அதனால், வேளாண் துறை சார்ந்த வளர்ச்சி திட்டங்களை, மத்திய அரசு முடுக்கிவிட்டு உள்ளது.இது போன்ற நடவடிக்கைகளால், வேளாண் சாகுபடி பரப்பு அதிகரிக்கும். அதற்கு ஏற்ப, உரங்க-ளுக்கான தேவையும் உயரும். அடுத்த இரு ஆண்டுகளில், உரங்களுக்கான தேவை, ஆண்டுக்கு, 3 சதவீதம் அதிகரிக்-கும்.

தற்போது, உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்யும் அள-விற்கு, உரம் உற்பத்தி செய்யப்படுவது இல்லை; இறக்குமதி மூலமே பூர்த்தி செய்து கொள்ளப்படுகிறது.கடந்த நிதியாண்-டில், உரத்திற்கான தேவை, 6.60 கோடி டன் என்றளவில் இருந்தது. ஆனால், 3.70 கோடி டன் உரம் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது.கடந்த, 10 ஆண்டுகளில், உள்நாட்டில் உரம் உற்பத்தி, ஆண்டுக்கு, 1.63 சதவீதம் என்றளவில், மிகக் குறைவாகவே வளர்ச்சி கண்டு வந்துள்ளது. வெளிநாட்டில்அதே சமயம், இதே காலத்தில் உரம் இறக்கு-மதி, ஆண்டுக்கு, சராசரியாக, 9 சதவீதம் அதிகரித்துள்-ளது.இந்தியாவின் மொத்த உரம் இறக்குமதியில், சீனாவின் பங்களிப்பு, 50 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. சீனா, கடந்த நிதியாண்டில், இந்தியாவுக்கு, 42 லட்சம் டன் உரம் ஏற்றுமதி செய்துள்ளது. இது, 10 ஆண்டுகளுக்கு முன், 1.55 லட்சம் டன் என்ற அளவிற்கு, மிகக் குறைவாக இருந்-தது.சீனா தவிர, ஓமன், ஈரான் ஆகிய நாடுகளில் இருந்தும், உரம் இறக்குமதி செய்யப்படுகிறது. வளைகுடா நாடுகளில் எரிவாயு விலை குறைவாக உள்ள-தால், அங்கு உரம் தயாரித்து, இறக்குமதி செய்வது லாபகர-மாக இருக்கும் என, இந்தியா கருதுகிறது.அதனால், வளை-குடா நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து, அங்கு, உரம் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அமைப்பது குறித்து, இந்திய பொதுத் துறை நிறுவனங்கள் ஆய்வு செய்து வருகின்றன.இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

3வது இடம்இந்தியா, உலகளவில், உரம் உற்பத்தியில் மூன்றாவது இடத்திலும், பயன்பாட்டில், இரண்டாவது இடத்திலும் உள்ளது. சீனா, உரம் உற்பத்தி மற்றும் பயன்பாட்டில், முதலிடத்தில் உள்ளது.

தினகரன்

**வனப்பகுதியில் தொடர் மழை : மேகமலை அருவியில் நீர்வரத்து**



வருசநாடு: வனப்பகுதியில் இரண்டு நாட்களாக மழை பெய்து வருவதால் மேகமழை அருவியில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. வருசநாடு அருகே கோம்பைத்தொழு மலைப்பகுதியில் மேகமலை அருவி அமைந்துள்ளது. இந்த அருவியில் இருந்து கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் குமணன்தொழு, காமன்கல்லூர், வெம்பூர், வனத்தாய்புரம் உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படுகிறது. அருவியில் நீர்வரத்து உள்ள நேரங்களில் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை அதிகம் காணப்படும்.

மேகமலை வனப்பகுதியில் கடந்த சில மாதங்களாக போதிய அளவில் மழை இல்லை. இதன்காரணமாக அருவியில் நீர்வரத்து மிகவும் குறைவாக காணப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் அதிகம் வரவில்லை. கடந்த இரண்டு மாதங்களாக கோம்பைத்தொழு பகுதியில் வெயில்

கொளுத்தியதால் அருவியில் நீர்வரத்து முற்றிலுமாக நின்று போனது. இதனால் கோம்பைத்தொழு உள்ளிட்ட 20 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் இருந்தது.

இந்நிலையில் கடந்த மூன்று நாட்களாக மேகமலை வனப்பகுதியில் கனமழை பெய்து வருகிறது. இதன்காரணமாக நேற்று மேகமலை அருவியில் நீர்வரத்து ஏற்பட்டது. தொடர்ந்து மேகமலை வனப்பகுதியில் மழை பெய்து வருவதால் அருவியில் நீர்வரத்து அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது. அருவியில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளதால் 20 கிராமங்களில் குடிநீர் பற்றாக்குறை நீங்கியது. மேலும் அருவிக்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கையும் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

**வால்பாறையில் கோடை மழை: வனங்களில் பசுமை திரும்புகிறது**



வால்பாறை: வால்பாறையில் சுற்றுவட்டாரப்பகுதியில் பெய்து வரும் கோடை மழை காரணமாக வனப்பகுதிகள் மீண்டும் பசுமையடைய துவங்கி உள்ளது. இதனால் வனத்தீயின் கோரப்பிடியில் இருந்து வனங்கள் பாதுகாப்பு அடைந்துள்ளதாக வனத்துறையினர் தெரிவித்து உள்ளனர்.

கோவை மாவட்டம் பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை புலிகள் காப்பகத்தில் புலி, சிறுத்தை, யானை, காட்டெருமை, சிங்கவால் குரங்கு, மான்கள் உள்ளிட்ட வன விலங்குகள், மற்றும் அரிய வகை பறவைகள் உள்ளன. பொள்ளாச்சி வன கோட்டத்தில் டாப்சிலிப், குரங்கு அருவி, வால்பாறை உள்ளிட்ட சுற்றுலா தலங்களுக்கு தமிழகம் மற்றும் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் வந்து செல்கின்றனர்.

மழை குறைவால் வால்பாறை பகுதியில் தேயிலை மகசூல் குறைந்தது. இதை தொடர்ந்து தற்காலிகத் தொழிலாளர்கள் மாற்றுப்பணியிலும், விடுப்பிலும், வேலையில்லாமலும், திண்டாடி வந்தனர். கோடை மழை சாரலால் வால்பாறை பகுதியில் தேயிலைத்தோட்டங்கள் பசுமையடைந்து வருகிறது. கடந்த 3 தினங்களாக சாரல் மழையுடன் குளிர் காற்று வீசிவருகிறது. தற்போது வால்பாறை பகுதி பசுமையாக மாறிவருவதால், சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்து வருகின்றனர். எனவே தேயிலை செடிகள் நன்கு துளிர ஆரம்பித்துள்ளது விவசாயிகளிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.